**செய்தி வெளியீடு எண்:86** **நாள்:05.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 4.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் தர்கா குளத்தின் நான்குபுறத் தடுப்புச் சுவர் 4 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்துக் கட்டப்படும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாகூர் தர்கா சுமார் 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இந்த தர்கா இந்தியா முழுவதிலிருந்தும் அனைத்து மக்களும் வந்து செல்லும் புனித தலமாகவும் மற்றும் சுற்றுலாத் தலமாகவும் உள்ளது. இந்த தர்காவிற்கு கிழக்கு பகுதியில் தர்காவிற்கு சொந்தமான இடத்தில் சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் உள்ள குளமானது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. இக்குளம் யாத்திரிகர்கள் நீராடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளக்கரையினை சுற்றி நான்குபுறங்களிலும் உயர்ந்த குடியிருப்பு மாடிக் கட்டடங்கள், வியாபாரத் தலங்கள், வழிபாட்டு கூடங்களுடன் மக்கள் அதிகமாக வசித்து வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 9.12.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிவர் மற்றும் புரெவிப் புயல்களின் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ள சேதத்தினை பார்வையிட்டார்கள். அப்போது, வெள்ளத்தினால் சேதமடைந்த நாகூர் தர்கா குளத்தினை நேரடியாக ஆய்வு செய்து, சேதமடைந்த நாகூர் தர்கா குளத்தின் தடுப்புச்சுவர் சீரமைத்து தரப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, நாகூர் தர்கா குளத்தின் தடுப்புச்சுவர் சீரமைப்பதற்கான திட்ட மதிப்பீட்டினை பொதுப்பணித் துறை தயாரித்து, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்

முதன்மைச் செயல் அலுவலரின் மூலமாக அரசுக்கு சமர்ப்பித்தது. அதனை மாண்புமிகு அம்மாவின் அரசு ஆய்வு செய்து, 4 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகூர் தர்கா குளத்தின் நான்குபுற தடுப்புச் சுவர்களை புதுப்பித்துக் கட்டும் பணிக்கு ஆணை வெளியிட்டது.

அதன்படி, 4 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகூர் தர்கா குளத்தின் நான்குபுறத் தடுப்புச் சுவர் புதுப்பித்துக் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ.எஸ்.மணியன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் நிலோபர் கபில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி சீ. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் சந்தர மோகன். B, இ.ஆ.ப., சிறுபான்மையினர் நல இயக்குநர் முனைவர் சீ. சுரேஷ் குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**